## கல்விக்கான தடைகளை ‘திராவிட மாடல்’ அரசு தகர்த்தெறியும் !

### மாணவிகளைப்போல் மாணவர்களுக்கும் மாதம் ரூ.1000 ஊக்கத் தொகை தரும்

# ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டம் - வரலாறு எப்போதும் பேசும்!

## கோவையில் – 3.28 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் திட்டத்தைத் தொடங்கி வைத்து – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் !

கோவை, ஆக.10-

**கோவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 3 இலட்சத்து 28 ஆயிரம் மாணவர்கள் பயன்பெறும் ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டத்தை தொடங்கி வைத்து உரையாற்றுகையில் ‘இத்திட்டம் பற்றி வரலாறு எப்போதும் பேசும்’ என்று பெருமிதம் பொங்கக் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.8.2024) கோயம்புத்தூர், அரசுக் கலைக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்ப் புதல்வன் திட்ட தொடக்க விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

இந்தக் கல்லூரியில் நுழைந்தவுடன் நீங்கள் கொடுத்த எனர்ஜிக்கும், அந்த வரவேற்புக்கும் முதலில் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு நான் வருவதற்கு முன்பே நேற்று இரவே, உங்கள் வங்கிக் கணக்கில் இந்த மாதத்திற்கான 1000 ரூபாயை அனுப்ப உத்தரவிட்டிருந்தேன். உங்களுக்கு கிடைத்ததா? மெசேஜ் வந்துவிட்டதா! மகிழ்ச்சியா! நன்றி...நன்றி....

**மனதுக்கு நெருக்கமான சில திட்டங்கள்!**

நாள்தோறும் ஏராளமான திட்டங் களைத் தீட்டி, நாங்கள் செயல்படுத்திக் கொண்டு இருந்தாலும், ஒரு சில திட்டங்கள்தான் நம்முடைய மனதுக்கு நெருக்கமான திட்டங்களாக இருக்கும்!

வரலாற்றில் என்றைக்கும் நம்முடைய பெயரை சொல்லப் போகும் திட்டமாக இருக்கும்! அப்படிப்பட்ட திட்டமாக உருவாகி இருக்கும், தமிழ்ப்புதல்வன் திட்டத்தை தொடங்கி வைக்க பெருமகிழ்ச்சியுடன் கோவைக்கு வந்திருக்கிறேன்.

இந்தத் திட்டத்தால் தமிழ்நாடு முழுவதும் பயன்பெறப்போகும் மாணவர்கள், காணொலிக் காட்சி வாயிலாக இந்தக் கூட்டத்தில் இணைந்திருக்கிறீர்கள்.

இந்தத் திட்டத்தை தொடங்கி வைக்க நான் தேர்ந்தெடுத்திருக்கும் இடம், இந்தக் கோவை மண்டலம்! ஏனென்றால், இந்த அன்பான மக்கள், பாசமான மக்கள், சேவை மனப்பான்மையுள்ள மக்கள் வாழும் பகுதி இது! தொழில்துறையில் சிறந்த மண்டலம் இது! இந்தியாவின் தலை சிறந்த கல்வி நிறுவனங்கள் இருக்கும் மண்டலம் இது! பழமையும், புதுமையும் கலந்த பகுதி இது! இங்கு இருக்கின்ற மக்கள் பெரியவர்களை மதிப்பது, விருந்தோம்பல் உள்ளிட்ட நற்பண்புகளில் சிறந்து விளங்குகிறார்கள்.

**இந்தியாவிற்கே தமிழ்நாடு முன்னோடி!**

நம்முடைய திராவிட மாடல் அரசைப் பொறுத்தவரைக்கும், கடந்த மூன்று ஆண்டுகளில், மக்களுக்கு நேரடியாக பயனளிக்கக் கூடிய ஏராளமான திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு வருகிறது. தமிழ்நாடு தான் இந்தியாவுக்கே முன்னோடியான மாநிலம் என்று சொல்வது போன்ற பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.

திராவிட மாடல் அரசு என்று சொன்னாலே, அது சமூகநீதிக்கான அரசு! பெண்கள் பொருளாதார விடுதலை பெறுவதும், இளைஞர்கள் கல்வி உரிமை பெறுவதும் தான் சமூகநீதியை நோக்கிய நம்முடைய பயணத்திற்கான அடித்தளம்! அதனால்தான், இந்த இரண்டுக்கும் அரசால் என்னென்ன உதவிகள் எல்லாம் செய்ய முடியும் என்று பார்த்து பார்த்து செய்கிறோம்!

**விடியல் பயணம் திட்டத்தால் 518 கோடி முறை பயணம்!**

பொருளாதார விடுதலை என்று எடுத்துக்கொண்டால், பெண்களுக்கு பேருந்தில் கட்டணமில்லாமல் பயணம் செய்யக்கூடிய வசதியை உருவாக்கிக் கொடுப்போம் என்று வாக்குறுதி கொடுத்தோம்! சொன்னபடியே, முதலமைச்சரான தும் நான் போட்ட முதல் கையெழுத்தே விடியல் பயணம் திட்டத்திற்கு தான்! விடியல் பயணத்தை இதுவரை 518 கோடி முறை பெண்கள் பயன்படுத்தி இருக்கின்றார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.8.2024) கோயம்புத்தூரில் நடைபெற்ற அரசு விழாவில், 6–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளிலும் மற்றும் 6–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியிலும் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/– உதவித் தொகை வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக மாணவர்களுக்கு பற்று அட்டைகளை (Debit Card) வழங்கினார்கள். இவ்விழாவில், உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி ஆர். ரங்கநாயகி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார், கே. ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

> **“வாழ்வில் சில நாட்கள் மறக்க முடியாததாக - வரலாற்றில் நம்மை இடம்பெற வைக்கக்கூடியதாக அமையும். அத்தகைய நாள், தமிழ்ப் புதல்வன் திட்டம் தொடங்கப்பட்ட இந்தப் பொன்னாள்!**
>
> **மாணவக் கண்மணிகளே!**
>
> **நீங்கள் உயர உயரப் படிக்க வேண்டும்! தடைகள் என்பது உடைப்பதற்காகத்தான்! உங்களுக்குத் துணையாக - பக்கபலமாக, உங்களது பெற்றோர்கள் மட்டுமல்ல, நானும் - எனது திராவிட மாடல் அரசும் இருக்கிறோம்! என்றும் இருப்போம்!”**
>
> **- முதல்வர் ‘ட்விட்டர்’ பதிவு**

அதேபோல், மகளிர் வாழ்வுக்கு விடியல் தரும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்! இந்தத் திட்டம் மூலம் ஒரு கோடியே 15 லட்சம் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கிக் கொண்டு வருகிறோம்.

கல்வி உரிமை என்று எடுத்துக்கொண்டால், குழந்தைகளின் பசியைப் போக்கும் காலை உணவுத் திட்டம்! இந்த திட்டத்தால், 20 லட்சத்து 73 ஆயிரம் மாணவர்கள் தினமும் வயிறார காலை உணவு சாப்பிடுகிறார்கள்.

**‘நான் முதல்வன்’ திட்டத்தால் 28 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு!**

அடுத்து, நம்முடைய பயணத்தையும், லட்சியத்தையும் எதிர்காலத்திற்கு எடுத்துக் கொண்டு போகும் இளைஞர்களுக்காக தொடங்கப்பட்ட திட்டம், நான் முதல்வன் திட்டம்! இதுவரை 28 இலட்சம் மாணவர்களுக்கு பயிற்சியும் கொடுத்து வேலைவாய்ப்பு பெறுவதையும் உறுதி செய்திருக்கிறோம்!

மாணவிகள் என்று எடுத்துக்கொண்டால், புதுமையான, புரட்சிகரமான திட்டமாக செயல்படுத்திக் கொண்டு வருகின்ற புதுமைப்பெண் திட்டம்!

3 லட்சத்து 28 ஆயிரம் மாணவிகளுக்கு இந்தத் திட்டத்தின்கீழ் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கிக் கொண்டிருக்கிறோம். “புதுமைப்பெண்” திட்டத்தில் மாணவிகள் பயன்பெறுகிறார்களே, எங்களுக்கு அப்படி கிடையாதா?” என்று ஆண் மாணவர்கள் கேட்டீர்கள். கேட்டீர்களா, இல்லையா? அந்த கோரிக்கையை ஏற்று உருவாக்கப்பட்ட திட்டம் தான், “தமிழ்ப் புதல்வன்” திட்டம்!

அரசுப் பள்ளியில் படித்து கல்லூரிக்கு வர இருக்கும் மாணவர்களுக்கு, இனி மாதம், மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப் போகிறோம். உயர் கல்வியில் மாணவர்கள் சேர்க்கையை மேலும் மேலும் அதிகரிக்க, அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் படிக்கும் ஏழை எளிய மாணவர்கள் சாதனையாளர்களாக உருவாக்கும் உன்னத நோக்கத்துடன் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டம் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் படித்து தேர்ச்சிப் பெற்றவர்களுக்கும், அரசு உதவிபெறும் பள்ளிகளில், 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் படித்து தேர்ச்சி பெற்றவர்களுக்கும் பொருந்தும்! கலை, அறிவியல், கல்லூரிகளில் மூன்றாண்டு படிக்கும் பட்டப் படிப்புகள், நான்கு ஆண்டுகள் படிக்கும் பொறியியல் கல்வி பட்டப்படிப்புகள், 5 ஆண்டுகள் படிக்கும் மருத்துவப் படிப்புகள், 3 அல்லது 4 ஆண்டுகள் படிக்கும் சட்டம், மருத்துவம் சார்ந்த படிப்புகள், அதற்கு இணையான படிப்புகள் படிக்கும் மாணவர்களும் இந்தத் திட்டத்தில் மூலமாக பயன்பெறலாம். எட்டாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பு முடித்து, தொழிற்பயிற்சி படிக்கின்றவர்களும் இந்தத் திட்டத்தில் பயன்பெறலாம்.

இந்தத் தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் மூலமாக, 3 லட்சத்து 28 ஆயிரம் மாணவர்கள் பயன்பெறக்கூடிய வகையில் இந்த ஆண்டுக்கு 360 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் மாணவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்.

திராவிட மாடல் அரசை வழிநடத்தும் முதலமைச்சரான நான், ஒரு தந்தை நிலையிலும், உங்கள் குடும்பத்தில் ஒருவனாகவும் இருந்து, மாணவக் கண்மணிகளாகிய உங்களுக்காக உருவாக்கிய திட்டம் தான் இந்தத் திட்டம்! இதன் மூலமாக, நீங்கள் அடைகின்ற வளர்ச்சியை, அடுத்தடுத்த ஆண்டுகளிலும் நான் கவனமாக கண்காணிப்பேன்!

இந்த விழா நடந்து கொண்டிருக்கும் கோவை அரசு கலைக் கல்லூரி 173 ஆண்டுகள் பழமை வாய்ந்தது! இந்தக் கல்லூரியில், 6,500 மாணவ - மாணவிகள் படிக்கின்றார்கள். இந்தக் கல்லூரி முதல்வர் என்னிடம் ஒரு கோரிக்கை வைத்தார். அதாவது, இந்தக் கல்லூரிக்கு மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கான விடுதிக் கட்டடம், பல்வேறு கருத்தரங்குகள், ஆய்வரங்குகள் நடத்த ஏதுவாக ஒரு கருத்தரங்கக்கூடம் கட்டித்தரவேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார். அவரின் கோரிக்கையை ஏற்று, கோவை அரசு கலைக்கல்லூரியில் மாணவிகளுக்கான விடுதிக் கட்டடமும், கருத்தரங்கக் கூடமும் கட்டித் தரப்படும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

> **வறுமை இல்லாத, சமத்துவம் வாய்ந்த, ஒரு அறிவார்ந்த தமிழ்ச் சமுதாயத்தை நாம் வருங்காலத்தில் உருவாக்க வேண்டும். உலக அளவில் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு விளங்க வேண்டும். மாணவர்கள் கல்வி கற்க எதுவும் தடையாக இருக்கக் கூடாது. தடங்கல் ஏற்பட்டால், அதை உடைத்தெறிந்து மாணவ சமுதாயம் வெற்றி பெறவேண்டும். அதற்கு வேண்டிய உதவிகளை செய்ய, நான் இருக்கிறேன்! நம்முடைய திராவிட மாடல் அரசு இருக்கிறது!**

**மேலை நாடுகளுக்கு இணையாக தமிழ்நாடு!**

முதலாவது, நான் உங்களிடத்தில் கேட்டுக் கொள்ள விரும்புவது, 2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்த வேண்டும். இதன்மூலம், வளர்ச்சியடைந்த மேலை நாடுகளுக்கு இணையான கட்டமைப்பு வசதிகள் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு உயரும்.

இரண்டாவது, எல்லாக் குழந்தை களும் உயர்கல்வி படிக்க வேண்டும்! எந்தக் காரணத்தை கொண்டும், பள்ளிப்படிப்பு முடிந்ததும், ஒரு மாணவர் கூட உயர்கல்வி கற்காமல், திசைமாறி சென்றுவிடக்கூடாது. கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் எல்லோரும் தங்களின் கல்வித் தகுதிக்கேற்ப, நல்ல வேலைவாய்ப்புகளை பெறவேண்டும். நம்முடைய மாணவர்கள் உயர்கல்வி பல பயின்று, வாழ்க்கையில் சிறக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கனவு!

இந்த இலக்குகளை அடைவதற்காக தான், நான் கடுமையாக உழைத்து புதிய பல திட்டங்களை உருவாக்கியிருக்கிறேன். மாணவக் கண்மணிகளான நீங்கள் எல்லோரும் இது போன்ற திட்டங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். படித்து, நல்ல உயரங்களை அடைந்து, உங்களுக்காகவும், உங்கள் குடும்பத்தின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபடவேண்டும்.

வறுமை இல்லாத, சமத்துவம் வாய்ந்த, ஒரு அறிவார்ந்த தமிழ்ச் சமுதாயத்தை நாம் வருங்காலத்தில் உருவாக்க வேண்டும். உலக அளவில் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு விளங்க வேண்டும். மாணவர்கள் கல்வி கற்க எதுவும் தடையாக இருக்கக் கூடாது. தடங்கல் ஏற்பட்டால், அதை உடைத்தெறிந்து மாணவ சமுதாயம் வெற்றி பெறவேண்டும். அதற்கு வேண்டிய உதவிகளை செய்ய, நான் இருக்கிறேன்! நம்முடைய திராவிட மாடல் அரசு இருக்கிறது!

**தடைகளைப் பார்த்து சோர்ந்துவிடக் கூடாது!**

ஒலிம்பிக்கில் பங்கேற்ற சகோதரி வினேஷ் போகத் அவர்கள், தன்னுடைய வாழ்க்கையில் எப்படிப்பட்ட தடங்கல்களை எதிர்கொண்டார் என்று உங்கள் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஆனால், அவர் பலவீனமானவராக வீட்டுக்குள் முடங்கிவிடாமல், தைரியமும், தன்னம்பிக்கையும், அசாத்திய துணிச்சலும் உள்ள பெண்ணாக போராடி, இன்றைக்கு நாம் எல்லோரும் பாராட்டக் கூடிய அளவிற்கு அவர் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கிறார்.

ஒன்றை மட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். “தடைகள் என்பது உடைத்தெறியத்தான்!” தடைகளைப் பார்த்து நீங்கள் ஒருபோதும் சோர்ந்துவிடக் கூடாது! முடங்கிவிடக் கூடாது! வெற்றி ஒன்றே உங்கள் இலக்காக இருக்கவேண்டும்! அதை குறி வையுங்கள்! நிச்சயம் ஒரு நாள் வெற்றி வசப்படும்! உங்கள் மேல் நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைவிட, அதிக நம்பிக்கையை நான் உங்கள் மேல் வைத்திருக்கிறேன்!

உங்களுக்குப் பின்னால், உங்கள் பெற்றோர், உங்கள் குடும்பம் மட்டுமல்ல; என்னுடைய திராவிட மாடல் அரசும் இருக்கும் என்பதை மறந்துவிடாதீர்கள்! மறந்துவிடாதீர்கள்!

வாழ்க்கையில் பல வெற்றிகளைப் பெற போகும் புதுமைப் பெண்களுக்கும், தமிழ்ப்புதல்வர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகள்! வாழ்த்துகள்! வாழ்த்துகள்! வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### கடந்த அ.தி.மு.க. ஆட்சியில்

# சிறைத்துறையில் மெகா ஊழல் கண்டுபிடிப்பு!

## முன்னாள் டி.ஜி.பி. ஜார்ஜ்க்கு சம்மன் அனுப்ப - பொது கணக்குக்குழு உத்தரவு!

சென்னை, ஆக. 10-

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் சிறைச்சாலைகளில் ஜாமர் கருவி பொருத்தியதில் பல கோடி ரூபாய் சுருட்டியது அம்பலமாகி உள்ளது.

கடந்த 2017ஆம் ஆண்டு சிறைகளில் பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில், 9 மத்திய சிறைகளில் உள்ள 12 உயர் தொகுப்பு தொகுதிகளில் 5 கோடியே 40 லட்சம் ரூபாய் செலவில் செல்போன் செயலிழக்க செய்யும் ஜாமர்கள் பொருத்தப்பட்டு, அ.தி.மு.க. ஆட்சியில் செயல்படுத்தப்பட்டது.

அதன்படி பாளையங்கோட்டை, மதுரை, திருச்சி ஆகிய மத்திய சிறைகளிலும், புழல், வேலூர், திருச்சி, கோவை மற்றும் மதுரையில் உள்ள 5 பெண்கள் தனி சிறைகளிலும் கூடுதலாக 12 கருவிகள் 10 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டதாக அன்றைய அ.தி.மு.க. ஆட்சி காலத்தில், சிறைச்சாலைகள் துறை கொள்கை விளக்கக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இந்நிலையில், தமிழ்நாடு சட்டமன்ற பொது கணக்குக் குழு தலைவர் செல்வப்பெருந்தகை தலைமையில் 6 பேர் குழுவினர் கடந்த சில நாட்களுக்கு முன்பு புழல் மத்திய சிறையில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வில், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் சிறைத்துறையில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

அதாவது கைதிகளுக்கு சிக்கன் வழங்கியது, முட்டை வழங்கியது, சிறை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான நவீன கருவிகள் வாங்கியது உள்ளிட்டவைகளுக்கு ஒதுக்கிய நிதியில் பல்வேறு முறைகேடுகளை நடைபெற்றுள்ளதை ஆதாரத்துடன் இந்த ஆய்வு குழுவினர் கண்டு பிடித்துள்ளனர்.

கைதிகள் திருட்டுதனமாக செல்போனில் பேசுவதை தடுக்கக்கூடிய ஜாமர் கருவிகளை பொருத்துவதற்காக ஒதுக்கிய நிதியை சூறையாடியுள்ள தகவல் தற்போது அம்பலமாகியுள்ளது.

அப்போது சிறைத்துறை டி.ஜி.பி.யாக ஓய்வு பெற்ற ஜார்ஜ்க்கு சம்மன் அனுப்ப பொது கணக்குக்குழு உத்தரவிட்டுள்ளது.

